**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 311/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | திரு. ராஜ்குமார் |
| Father's Name/Husband Name: | திரு. பெரியசாமி |
| Village : | எஸ். ஆடுதுறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 46/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 2 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணி புரிகிறேன். அ.சா.1 செல்லம்மாள் எனது அத்தை. எதிரிகள் அனைவரையும் தெரியும். எதற்காக அ.சா.1 எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ப.சா.5 பெரியசாமி எனது தகப்பனார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு போலிசார் சம்பவ இடத்தருகே என் வீடு உள்ளதால் எழுதாத வெள்ளைத்தாளில் என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். எதற்காக என்று கேட்டதற்கு எதுவும் சொல்லவில்லை. அந்த பார்வை மகஜரில் உள்ள **இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் அனைவரும் என் உறவினர்கள். எனக்கும் அ.சா.1 செல்லம்மாளுக்கிடையே பேச்சு வார்த்தை இல்லை. எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து போடுவது தவறு என்ற விபரம் நான் உதவி பேராசிரியராக பணிபுரிவதால் எனக்கு தெரியும் என்றால் போலிசார் எனக்கு பிரச்சனை ஏதும் ஏற்படாது என்று கூறி மிரட்டி கையொப்பம் கேட்டதால் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 13.11.2017 அன்று 15.30 மணியளவில் என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் உறவினர்கள் என்பதாலும், அ.சா.1க்கும் எனக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை என்பதாலும், எதிரிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.